# ★ யாழ். நகரில் மாணவர் நடாத்திய பேரணி

(யாழ்ப்பாணம்)
1991ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடாத்தப்படாமலிருந்த க. பொ. த. உயர்தர பரீட்சையை ஏப்ரல் மாதத்தில்திட்டமிட்டபடி நடாத்தக் கோரியும் அதற்குரிய திகதியையும் அரசு உத்தியோக பூர்வமாக அறிவிக்க வேண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 29 இதழ் 31
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 12 — 03 — 1992

## 7 லொறி பொருட்கள் துறைமுகத்தில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)
ஏழு லொறி உணவுப் பொருட்களும் 15 க்கு மேற்பட்ட தேங்காய் எண்ணை பரல்களும் காங்கேசன்துறை துறைமுகத்திலுள்ள உணவுக் களஞ்சியத்தில் நீண்ட நாட்களாக தேங்கிக் கிடப்பதாகக் கூறப்படுகின்றது.

யாழ். நகரிலுள்ள தமது உறவினர்களுக்கு கொழும்பி

(4ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. [சா] பரீட்சை மாத இறுதியில்

(கொழும்பு)
கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சை முடிவுகள், இந்த மாத முடிவில் வெளியாகுமெனப் பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் புலிகள் அதிரடி

# பத்து இராணுவம் உயிரிழப்பு

# ஏழு காவலரண்கள் தகர்ப்பு

(யாழ்ப்பாணம்)

**ஆனையிறவு தட்டுவான்கொட்டியில் காவலரண்கள் மீது புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட 10 நிமிட நேர அதிரடி த்தாக்குதலில் 7 காவலரண்கள் தகர்க்கப்பட்டதுடன் 10 படையினர் உயிரிழந்தும் பல படையினர் படுகாயமடைந்துமுள்ளனர்.**

இதுபற்றி தெரியவருவதாவது,

ஆனையிறவு பகுதியிலுள்ள தட்டுவான்கொட்டி என்ற இடத்தில் இருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் ஏழு காவலரண்களை நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தனர். நேற்று அதிகாலை 3-10 மணியளவில் இடம்பெற்ற இத்துணிகர மின்னல்வேக அதிரடியில் பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர்: பெருமளவு நவீன ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர், புலிகள் தரப்பில் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்,

இந்த அதிரடித் தாக்குதல் சுமார் பத்து நிமிடங்கள் மட்டுமே இடம்பெற்றது. புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்கமுடியாத இராணுவத்தினர் காயமடைந்த தமது சகாக்களையும் தூக்கிக் கொண்டு முகாமினுள் ஓடிவிட்டனர். (61, 56, 150, 83)

## விமானங்கள், பீரங்கிகள் அகோர தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு- தட்டுவான் கொட்டியில் நேற்று அதிகாலை புலிகள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையையடுத்து அப்பகுதிகளில் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் பரவலாக இடம்பெற்றதுடன் கடலிலிருந்து பல மணிநேரம் பீரங்கித் தாக்குதலும் இடம்பெற்றது.

நான்கு பொம்மர் விமானங்களும், 2 ஹெலிகொப்படர்களும் மாறி மாறி நேற்றுக் காலை வரை தாக்குதல்களை நடத்தின.

மாலை நேரப் பகுதிகளில் எழுதுமட்டுவாள், இயக்கச்சி போன்ற பகுதிகளிலும் குண்டு வீச்சுச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிகிறது. (56)

## மாதம் 100 படையினர் வடக்கு-கிழக்கில் உயிரிழப்பு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தில் ஒவ்வொரு மாதமும் சுமார் 100 படையினர் உயிரிழப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் இத்தொகை அதிகரித்ததுடன் காயமடைந்த படையினரின் எண்ணிக்கையும் பெருமளவில் அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் சராசரி ஆறு படையினர் ஏதோவொரு தாக்குதலில் அவயங்களை இழப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## பிரிட்டனில் ஏப்ரலில் தேர்தல்

(லண்டன்)
இங்கிலாந்து பொதுத் தேர்தல் ஏப்ரல் மாதம் 9ம் திகதி நடைபெற இருக்கிறது. (மா)

## வீரச் சாவு

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு தட்டுவான் கொட்டிப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று அதிகாலை ஏற்பட்ட கடும் மோதலின்போது

(4-ம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடியில் சிக்கி 12 இராணுவம் படுகாயம்

(கொழும்பு)
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணத்தீவு பகுதியில் விடுதலைப்புலிகளின் கிளேமோர் கண்ணிவெடி தாக்குதலில் 12 இராணுவத்தினர் பலத்த காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் வந்த வாகனம் கண்ணிவெடியில் சிக்கி பலத்த சேதமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இதில் ஊர்காவற்படையை சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

# கொழும்பில் சீன யுத்த விமானம் நேற்றுக் காலை வெடித்துச் சிதறியது?

(கொழும்பு)
கொழும்பு தெற்கு இரத்மலான பகுதியில் நேற்றுக் காலை சீன யுத்த விமானம் ஒன்று வெடித்துச் சிதறியதில் கொழும்பு நகர் இருமுறை அதிர்ந்ததாக நேற்றிரவு ஏஜென்ஸிசெய்தி ஒன்று தெரிவித்தது.

இரத்மலான விமான தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த சீனாவிலிருந்து வாங்கப்பட்ட போர் விமானங்களில் ஒன்று கோளாறில் வெடித்து முதல் சத்தம் எழுந்திருக்கலாமென்றும், போர் விமானத்தில் தயாராக வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு தவறுதலாக வெடித்து இரண்டாவது சத்தம் ஏற்பட்டிருக்கலாமென்றும் சில செய்திகள் கூறின. எனினும் இராணுவம் இதனை மறுத்துள்ளது.

கொழும்பு மாநகரில் நேற்றுக்காலை வெடிகுண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலி

(வவுனியா)
வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது, நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். (க)

## இலங்கைக்கு எதிராக குவைத்தில் பிரசாரம்

(கொழும்பு)
இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் பற்றிக் குவைத்தில் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் குறித்து இலங்கை அரசு பெரும் அதிர்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக

(4-ம் பக்கம் பார்க்க)

## பாரிய குண்டுச் சத்தம் இராணுவம் திகைப்பு

(கொழும்பு)
கொழும்பு தெற்கில் நேற்று அதிகாலை இரு குண்டுவெடிப்பு சத்தங்கள்கேட்ட இடத்தை நோக்கி படையினர் சென்றுள்ளதாகவும் அவ்விடத்தை மாலைவரை கண்டுபிடிக்க முடியவில்லையெனவும் இராணுவ தலைமைப்பீடம் நேற்றுமாலை தெரிவித்தது.

இச்சத்தம் இராணுவ தரப்

(4-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா உதவி

(கொழும்பு)
அமெரிக்கா இலங்கைக்கு 2 லட்சத்து 30 ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமைமாவை வழங்கவுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சிறுகதை எழுத

''சிறுகதை எழுதுவோர்க்கு எனது பட்டறிவுக் குறிப்புகள்'' — வரதர் எழுதியது. ரூபா 18. எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6055)


## அகதிகள் இடம் பெயர்வு

(யாழ்ப்பாணம்)

கடந்தவாரம் அராலி கிழக்கில் படையினரால் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின் போது அச்சம் காரணமாக அப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துவந்த சுமார் 200 குடும்பங்கள் நவாலி அமெரிக்க மிஷன் பாடசாலையில் தங்கியிருக்கின்றனர். (56)

## காசோலை கண்டெடுப்பு

[யாழ்ப்பாணம்!

திருமதி எஸ். செல்லத்துரை என்பவரின் பெயருக்கு எழுதப்பட்ட காசோலை ஒன்று திரு. ஏ. கார்த்திகேசு என்பவரால் யாழ் நகரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி இந்த காசோலையை 'ஈழநாடு' காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## இப்படியும் நடக்கிறது

[புதுடில்லி]

இந்திய லோக்சபாவில் ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்ததிருத்தங்கள் உண்மையில் 38 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் 52 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது என்று கூறப்பட்டது. வாக்குகளை கணக்கெடுக்கும் மின் இயந்திரத்தின் கோளாறினால் இந்தப் பிழை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [மா]

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது மருத்துவமனையைச் சேர்ந்த ஊழியர்களுக்கும், அல்வாய் வதிரி டயமன் விளையாட்டுக்கழகத்தினருக்குமிடையே வதிரி மைதானத்தில் இன்று வியாழக்கிழமை 4 மணிக்கு உதைபந்தாட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

அல்வாய் பகுதியில் வீரமரணமடைந்த போராளிகளான அல்வின், ஜக்ஸன் ஆகிய இருவரின் ஞாபகார்த்தமாக இவ் உதைபந்தாட்டகற்றுப்போட்டி நடைபெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கது, (56)

# இலங்கையின் கல்விதுறையில் பெரும் வீழ்ச்சி ஏற்படுகிறது

[கொழும்பு]

இலங்கையின் கல்வித்துறையில் பெரும் வீழ்ச்சி ஏற்படுவது தெரியவந்துள்ளதாக தேசிய கல்வி நிலையத்தின் ஆராய்ச்சிப்பிரிவு 1990 ஆம் ஆண்டு நடாத்திய ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது,

பொருளாதாரக் கஷ்டங்கள், கற்றலில் எதிர்நோக்கப்படும் பிரச்னைகள் உடல் மற்றும் மனோ ரீதியான ஆரோக்கியக்கேடு ஆகியனவும் இதற்குக் காரணமாகும்,

பாடசாலையில் புறம்பான வகுப்பறைகளும், தளபாடங்களும் போதியளவு இல்லாதிருப்பது மற்றொரு குறைபாடாகும். பாடசாலை சீருடைகளை பெற்றுக்கொள்வது மாணவர்கள் எதிர்நோக்கும் மற்றொரு பிரச்னையாகும். மாணவர்கள் பெற்றோருக்கு அவர்களது அலுவல்களில் உதவவேண்டியிருப்பதால் மாணவர் பாடசாலைக்கு செல்வதில் தடங்கல் ஏற்படுவதும் தெரியவந்துள்ளதாக இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

# தொண்டமான் செய்வது எதுவும் அரசின் ஒரு பகுதியே!

## அமைச்சர் தொண்டா பேட்டி

[புதுடில்லி]

வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு செல்லவிரும்பாத இராணுவம், பொலிஸாரே மலையகப் பகுதிகளிலும் பிரச்னை உள்ளதாகக் காட்டுவதன் மூலம் தாம் வடக்கு-கிழக்கு செல்வதை தவிர்த்து மலையகம் செல்ல நினைக்கிறார்கள். மலையகத்தில் புலிகளின் ஊடுருவல் என்பது ஒரு மாயை.

இவ்வாறு அமைச்சர் திரு. தொண்டமான் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

தொண்டமான் செய்வது எதுவும் அரசாங்கத்தின் ஒரு பகுதி என்பதை ஏற்றுக் கொள்ள முடியாதநிலையில் சில எதிர்க்குழுக்கள் எதிர்ப்புணர்வுடன் விமர்சிக்கின்றன.

அவர்கள் அரசுடனான எனது உறவை வெறுப்புடனேயே பார்க்கிறார்கள். அதை முறிப்பதற்கு அவர்கள் எதையும் செய்வார்கள். இதில் அவர்கள் தோல்வியடைந்துள்ளனர். இனிமேலும் தோல்வியடைவார்கள் என்றார். (சி)

# 'வஞ்சிக்கப்பட்ட — வனிதையர்க்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும்"

## மகளிர்தின ஆய்வுப்பட்டறை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

''கணவரால் கைவிடப்பட்ட, ஆண்களால் வஞ்சிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு, புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டும்'' இவ்வாறு சர்வதேச மகளிர் தினத்தில் அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்பட்ட கணவரால் கைவிடப்பட்டுள்ள பெண்களின் மறுவாழ்வு பற்றிய ஆய்வுப்பட்டறையின் இறுதியில் தீர்மானிக்கப்பட்டது.

திருமதி கனக தங்கராஜா தலைமையில் நடைபெற்ற இவ் ஆய்வுப்பட்டறையில் திருமதி கோபாலகிருஷ்ணன், திருமதி செல்லக்கிளி சின்னத்தம்பி ஆகியோர் பாதிக்கப்பட்ட பெண்களின் பிரச்னைகள் பற்றிய அறிமுக உரையை நிகழ்த்தினார்கள்.

இவ் ஆய்வுப்பட்டறையில் கணவரால் கைவிடப்பட்ட அறுபது இளம்பெண்கள் கலந்து கொண்டு தமது நிலைமைகளை விளக்கிக் கூறினர். பல பெண்கள் கண்ணீர் மல்கி சோகம் ததும்பிய நிலையில் தமது பிரச்னைகளை முன்வைத்தனர்.

இந்தப் பெண்களின் பிரச்னைகளைக் கேட்டறிந்த அறவழிப்போராட்டக் குழு செயலாளர் க. ஜீவகதாஸ் முதற்கட்டமாக இருபது பெண்களுக்கு புனர்வாழ்வு தொடர்பான ஊக்குவிப்புகளை வழங்கப்போவதாகவும், பின்னர் படிப்படியாக ஏனையவர்களுக்கும் இவ்வாறான புனர்வாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

இதுவரை காலமும் சமுதாயத்தினாலும், உறவினராலும் பாராமுகமாக இருந்த தமது பிரச்னைகளைக் கேட்டறிந்து தமது வாழ்வில் அக்கறை செலுத்திவரும் அறவழிப் போராட்டக்குழுவிற்கு இவ் ஆய்வுப் பட்டறையில் கலந்து கொண்ட பெண்கள் நன்றி தெரிவித்தனர்.

என். கே. துரைசிங்கம், த. யோகேஸ்வரி, எஸ். உமா தேவி, சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த றெபேக்கா ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

அறுபது பெண்களுக்கும் ஆய்வுப்பட்டறையின் இறுதியில் உலர் உணவு நிவாரணம் அறவழிப் போராட்டக்குழுவினால் வழங்கப்பட்டது.

# இந்திய அரசியலில் குழப்ப முயற்சி

[ஹைதராபாத்]

லோக்சபாவில் கடந்ததிங்கள் நடைபெற்ற வாக்கெடுப்பில் தமது கட்சி உறுப்பினர்களை குழப்ப வேண்டுமென்றே சதி முயற்சி நடந்திருப்பதாக தெலுங்கு தேசக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது,

இத் தீர்மானம் குறித்து வாக்குச் செலுத்த இம்மாதம் 10-ம், 11-ம் திகதிகளில் லோக்சபாவில் இருக்கும்படி உறுப்பினர்களை கேட்டுக்கொள்ளும் தவறான தந்திகள் தமது கட்சி எம். பி, களுக்குக் கிடைத்ததாகவும், இதனாலேயே தமது கட்சியைச் சேர்ந்த 4 எம். பி. கள் மட்டும் வந்ததாகவும் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)


# அறிவித்தல்

## சனசமூக நிலையங்களின் நிர்வாகக் குழுக் கலந்துரையாடல்

எதிர்வரும் 21-ம், 22-ம் திகதிகளில் (மார்ச்) சனசமூக நிலையங்களின் நிர்வாகக்குழுக்களின் கலந்துரையாடல்கள் எனது தலைமையில் அந்தந்த உப அலுவலகங்களிலும், நகரசபைக் காரியாலயங்களிலும் இடம்பெறும். இதில் பங்குபற்றாத சனசமூக நிலையங்களின் பதிவு இரத்துச் செய்யப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். கலந்துரையாடல் இடம்பெறும் நேரத்தைச் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களிலிருந்து தவறாது அறிந்துகொள்ளவும்,

ஏற்கனவே கேட்டதற்கிணங்கச் சகல சனசமூக நிலையங்களும் முதலுதவிப் பயிற்சிப் பட்டியலை 16-03-92 வெள்ளிக்கு முன்னர் எனது காரியாலயத்தில் தவறாது கையளிக்கவும்.

சுந்தரம் டிவகலாலா,<br>
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,<br>
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்,<br>
92-03-10.

(ஏ-1978)



## யாழ். மாவட்ட அரசாங்க ஓய்வூதியர் சங்கம் கருத்தரங்குகள்

மேற்படி சங்கத்தினால் கீழ்வரும் தினங்களிலும், இடங்களிலும் காலை 9-30 மணிக்கு கருத்தரங்குகள் நடாத்தப்படும்.

14-3-92 சனிக்கிழமை: சாவகச்சேரி ட்றீபேக் கல்லூரி<br>
21-3-92 சனிக்கிழமை: கோப்பாய் நாவலர் வித்தியாலயம்<br>
28-3-92 சனிக்கிழமை: சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

இப்பகுதிகளுக்குரிய கிளைகள் அமைப்பதற்குரிய ஒழுங்குகள் இக்கருத்தரங்கில் செய்யப்படும்.

அங்கத்தவர்களையும், ஏனைய ஓய்வூதியர்களையும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம். புதிய அங்கத்தவர்களும் சேர்க்கப்படுவார்கள்.

எஸ். எம். தியாகராசா,<br>
கௌரவச் செயலாளர்.

ஏ. வி. ஏ. ஜே. விஜயரத்தினம்,<br>
தலைவர்.

(சி-6053)


## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் சில முக்கிய விடயங்கள் கலந்தாலோசிக்க வேண்டியிருப்பதால் அனைவரையும் தவறாது சமூகம் தரும்படி யாழ் மாவட்ட கூட்டுறவுப்பிரிவினர் கேட்டுள்ளார்கள்.

# 26 லட்சம் ரூபா கடத்தல்பொருள்கள் சிக்கின

(கொழும்பு)

26 லட்சரூபாபெறுமதியான புடவைகளை இந்தியாவிலிருந்து இருபடகுகள் மூலம் கடத்தியவர்களை, நீர் கொழும்பு பகுதியில் உள்ள கடல்பகுதியில் வைத்து பொலிசார் மடக்கிப்பிடித்துள்ளார்கள்.

மணிப்புரி, காஞ்சிபுரம், சாரம் போன்ற விலையுயர்ந்த புடவை வகைகளே மேற்படி இருபடகுகளிலும் காணப்பட்டதாகவும், இப்படகுகளில் வந்த 6 இலங்கையர்களுக்கும் தலா $6\frac{1}{2}$ லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, சுங்கப்பகுதியினர் தெரிவித்தனர். (வி)

## லங்கா சிமெந்து ஊழியருக்கு முழுச் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைப் பகுதியில் இயங்கி வந்த லங்கா சிமெண்ட் தொழிற்சாலையில் கடமையாற்றிய ஊழியர் அனைவருக்கும் கடந்த வருடச் சம்பளப் பணத்தை எதுவித பாக்கியுமில்லாமல் உடன் வழங்கும்படி ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி ஊழியர்களின் சம்பளப் பணத்தை உடன் வழங்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி கடந்த வாரம் கொழும்பில் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது, (வி)

# தீவகத்தில் 117 பேருக்கு ஓய்வூதியம், சம்பளம்

(மானிப்பாய்)

தீவுப்பகுதியில் 117பேருக்கு ஓய்வூதியமும் அங்குள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் பணிபுரியும் 7 உத்தியோகத்தர்களுக்கு சம்பளமும் வழங்கப்பட்டுவருவதாக புனர்வாழ்வு புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சு யாழ். செயலகத்திற்கு பட்டியலொன்றை அனுப்பிவைத்துள்ளது.

இப்பட்டியலின்படி காரைநகரில் 49பேரும், நயினுதீவில் 48பேரும், அனலேதீவில் 20 பேருக்கும், ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அலுவலக உத்தியோகத்தர் நால்வருக்கும், நயினுதீவு உதவி அரசாங்க அதிபர் அலுலலக உத்தியோகத்தர் மூவருக்கும், சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அப்பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இவர்களின் பெயருக்கு யாழ். செயலகத்தின் மூலம் எந்தவித கொடுப்பனவுகளும் செய்யவேண்டாமென மேற்படி அமைச்சினுல் பணிக்கப்பட்டுள்ளது. (71)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

(மானிப்பாய்)

யாழ். செயலகத்திலும் மற்றும் பிரதேச செயலர் அலுவலகங்களிலும் மாகாண அரசின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் அலுவலக ஊழியர்களை தரம் இரண்டுக்குப் பதவியுயர்த்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்வலுவலகங்களில் சுமார் இருபதுக்கு மேற்பட்ட ஊழியர்கள் பல வருடங்களாக தரம் மூன்று பதவியில் பணிபுரிந்து வருவது குறிப்பிடத்கது. (71)

## பாடசாலை கிரிக்கெட்: சென்.ஜோன்ஸ் — பற்றிக்ஸ் வெற்றி - தோல்வி இல்லை

(யாழ்ப்பாணம்(

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 7விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 242 ஓட்டங்களைப்பெற்றது. பிரதீபன்-63, ஸ்ரீதரன் 50 ஓட்டங்களைப் பெற்றனர்.

சென். பற்றிகஸ் முதல் இன்னிங்ஸில் 8விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 194 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. பிரஸாத்-80 ஓட்டங்களைப்பெற்ருர், மக்ஸி 2மணித்தியாலம் 38 நிமிடங்கள் மைதானத்தில் துடுப்பெடுத்தாடி தமக்கு ஏற்பட இருந்த தோல்வியைத் தவிர்த்தது சிறப்பம்சமாகும்.

சென். ஜோன்ஸ் கல்லூரி ஆட்டம் முடிவடையும்போது 2-ஆவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 34 ஓட்டங்களைப் பெற்றது, (வி)

(11.03.92'ஈழநாடு'வில் வெளியான கிராம உத்தியோகத்தர் நியமன விண்ணப்பப்படிவத்தின் திருத்தப்படிவம்)

1. அளவு ஏ—4 (21-29 சென்றிமீற்றர்)
2. பக்கம் 1 பக்கம் 2

## வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் செயலகம்
## கிராம உத்தியோகத்தர் சேவையின் IIம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை — 1992

மாவட்டம்... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... .. .. மாவட்ட இல:

விண்ணப்பிக்கும் பிரதேசச் செயலாளர்/உ. அ. அதிபர் பிரிவு:

... ... ... ... ... ... ... ... ... ... ... பிரிவு இல:

01. விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடன் பெயர்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
ஆங்கிலத்தில்: முழுப்பெயர்:- ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
ஆங்கிலத்தில்:... ... ... ... ... ... ... ... ... ... ...
சிங்களம் / தமிழ்: ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

02. முகவரி:-
ஆங்கிலத்தில்:... ... ... ... ... ... ... ... ... ... ... ...
சிங்களம் / தமிழ்:... ... ... ... ... ... ... ... ... ... ... ...

03. பால்:- ஆண் — 1 பெண் — 2

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:- சிங்களம் - S
தமிழ் - T
ஆங்கிலம் - E

(இதனைப் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

05. நீங்கள் இலங்கை பிரஜையா என்பதை :- பரம்பரையாக - 1
பதிவு செய்வதன் மூலம் - 2

06. இனம்:-

| | | | |
|---|---|---|---|
| சிங்களம் | - 1 | இலங்கைத் தமிழ் | - 2 |
| முஸ்லீம் | - 3 | இந்தியத் தமிழ் | - 4 |
| மலாய் | - 5 | வேறு | - 6 |

07. பிறந்த திகதி:-
வருடம்: .................... மாதம்: .................... திகதி: ....................

08. பிறந்த இடம்:.................... மாவட்டம்:...............
பிரதேசச் செயலாளர் பிரிவு: ...........
கிராம உத்தியோகத்தர் பிரிவு.... ..........

09. விண்ணப்பிக்கும் பிரதேசச் செயலாளர் பிரிவில் வசித்த காலம்:
வருடம்:.............. மாதம்:............. திகதி:...............

10. க. பொ. த. (சா/த / தே. பொ. க. சா. பரீட்சை அல்லது தகைமை பெறும் பரீட்சையின் விபரங்கள்:
பரீட்சையின் பெயர்:........... வருடம்:........... .... பரீட்சை இல:........... .....

| பாடங்கள் | தரங்கள் | பாடங்கள் | தரங்கள் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

11. வேறு தகைமைகள்:

12. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றிற்கு நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா; ஆம்/இல்லை: (ஆம் எனின் விபரங்களைத் தருக)..... .........

13. விண்ணப்பதாரரின் சான்றிதழ்:

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னுல் வழங்கப்பட்டுள்ள விபரங்கள், எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானவையென தெளிவாகக் கூறுகிறேன்.

(ஆ) இவ்விண்ணப்பம் தவிர்ந்த வேறு விண்ணப்பம் ஏதேனும் இப்பரீட்சையின் பொருட்டு என்னுல் முன்னளிக்கப்படவில்லையெனவும் நேர்மையாகக் கூறிக்கொள்கிறேன். என்னுல் கூறப்பட்ட விபரங்கள் பொய்யானதும், பிழையானதும் என நான் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட முன்பு காணப்படுமிடத்து தகைமையற்றவனுவேன் எனவும் நியமனம் கிடைத்த பின்னர் கண்டுபிடிக்குமிடத்து சேவையிலிருந்து விலக்குவதற்கு உட்படுவேன் எனவும் அறிவேன்.

(இ) பரீட்சைக் கட்டணம் ரூபா :.................... செலுத்தப்பட்டுள்ளது.
காசுக்கட்டளை இல :...... ...
வழங்கிய தபால் அலுவலகம்:..............
திகதி:...............

(ஈ) நான் இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு உடன்படுகிறேன்.

திகதி:........... .................... ....................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

14. விண்ணப்பதாரர் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.
இவ்விண்ணப்பத்தை முன்னளித்த திரு/திருமதி:....................
என்பவர் எனக்கு நன்கு பரிட்சயமானவர் எனவும், அவர் 199....................ந் திகதி என் முன்னிலையில் தனது கையெழுத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:........... .................... ....................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்: ....................
பதவி: .................... .. ......
முகவரி: ........... ....................
திகதி: ....................

**குறிப்பு :** பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கழற்றியெடுக்கக்கூடிய விதத்தில் விண்ணப்பத்துடன் குண்டூசியொன்றினுல் இணைக்கவும். (ஏ 1981)

## வவுனியாவில் மருந்துக் களஞ்சியம்

(கொழும்பு)

உலக வங்கியின் உதவியுடன் வவுனியாவில் மருந்துக் களஞ்சியசாலை நிறுவப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நடவடிக்கைமூலம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான மருந்து வகைகளை தட்டுப்பாட்டில்லாமல் விநியோகிக்கக்கூடியதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## இராசி பலன்

12 03 1992
வியாழக்கிழமை
(தமிழுக்கு மாசி 29)

அட்டமி பி. ப. 4,00 மணி வரை. மிருகசீரிடம் மு. இ. 7-48 வரை: இராகு காலம் பகல் 1 52 முதல் 3.22 வரை. சுபநேரம் காலை 7.52 முதல் 9.22 வரை. மரணயோகம்.

மேடம்; நூன ஆதாயம் பெறல், காரிய சாதனை, கடித அனுகூலம்.

இடபம்: மறைமுகசந்திப்பு. தாமத போஜனம், தேகப் பாதிப்பு.

மிதுனம்: கடன் வசூல், உறவினர் வருகை, மனமகிழ்ச்சி.

கடகம்: பணவிரயம், தொழில் பகை. தர்மசெலவு.

சிங்கம்: அதிகாரிகள் உதவி, தேகசுகம், பணவரவு,

கன்னி: சாஸ்திரஆராய்ச்சி, உற்சாகம், நண்பர் ஆதரவு.

துலாம்: தைரியமான செயல், சிறுநஷ்டம், நற்பணி,

விருச்சிகம்: மனக்கவலை, வீண் கலவரம், பிணி.

தனுசு: கடின உழைப்பு. பெரியோர் ஆதரவு, காரிய வெற்றி,

மகரம்: தெய்வ வழிபாடு, நல்ல தகவல், வீண்வாதம்.

கும்பம்: செல்வந்தர் பகை, அமைதியின்மை, வெறுப்பு'

மீனம்: தகாத செயல், முன்கோபம்: பிடிவாதம்.

- ஜோஸ்யர்

## தவக்கால நற்சிந்தனை

''கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், கண்டடைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும்'' என்கிருர் யேசு, (மித் 7,7) நாங்கள் இந்தத் தவக்காலத்திலே மனம் உறுதி, ஆன்ம வரங்களை வேண்டுதல் செய்ய வேண்டும். ஏனெனில் கேட்கிற எலனும் பெறுகிருன்,

மோ. தார்சீசியஸ்

# தமிழ் பத்திரிகையாளர் பங்கு பிரச்னை தீர்வுக்கு அவசிய

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்னைகளை தீர்த்துவைப்பதில் தமிழ் பத்திரிகையாளர்கள் முக்கிய பங்கினை வகிக்க முடியும் என்று தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. கே. ரணசிங்கா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற தமிழ் பத்திரிகையாளர் கருத்தரங்கில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய அபிவிருத்தி முயற்சிகளில் முக்கிய பங்கினை வகிக்குமாறு பத்திரிகையாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். (மா)

## காங்கேசன் சிமெந்து ஆலை மக்கள் மயமாகிறது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையை மக்கள் மயப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக காங்கேசன் தொழிற்சாலை பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

இந்நடவடிக்கையை அமுல்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டி ஊழியர்களுக்கு சேவைக்கால பணம் வழங்குவதற்காக புதை முல்லா கமிட்டியின் சிபார்சுக்கமைய சிபார்சு செய்துள்ளது. (எஸ்)

## புலிகள் கைப்பற்றிய பெருமளவு ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு தட்டுவன் கொட்டிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று அதிகாலை நடைபெற்ற உக்கிரமோதலில் பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன, கைப்பற்றப்பட்ட நவீன ஆயுதங்களினதும், இராணுவதளபாடங்களினதும் விபரம் வருமாறு: ஆர். பி, ஜி-1, ஆர்.பி. ஜி. ஷெல்-5, ஆர். பி. ஜி. பிறப்ளர்-1, ரி. 56 1-2, ரி.56 2-3, ரி, 56 புதிய ரகம்-1, ஜி 3 ஏ 3-2, ஏ. கே. கோல்சர் 2, ஜி, 3 ஏ 3 மகசீன் -4, நேற்ரூ ரவைகள்-281, ஐ. எம். ரவைகள் 2738, ஜே. ஆர். கைக்குண்டு 9, ரி 56 மகசீன் 20, ஜி, 3 மகசீன் -2, சோல்சர் -1, ஹெல்மட் 2, தண்ணீர் கான் 1, தொலைத் தொடர்பு சாதனம் 1, சப்பாத்து 3 சோடி, (மா 83, 56, 150)

## ராஜீவ் கொலை வீடியோ கசற்றில் தில்லுமுல்லு இல்லையாம்

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பான வீடியோ கசற்றுக்களில் தில்லுமுல்லு எதுவும் செய்யப்படவில்லை எனவும் சிறப்பு புலன்விசாரணைக்குழு அவற்றைக் கைப்பற்றியுள்ளதாகவும், மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

லோக்சபாவில் இவ்விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: குறிப்பிட்ட இரண்டு கசற்றுக்களைத் தயாரித்த வீடியோகிராபர்கள் உட்பட இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் தீவிரமாக விசாரிக்கப்பட்டதாகவும், கசற்றுகளில் திருத்தம் செய்யப்பட்டதற்கான சான்றுகள் இதுவரை புலப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

ஆயினும் குறிப்பிட்ட வழக்கில் நிபுணர்களின் ஆலோசனை பெறப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (க)

### வீரச் சாவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். டேவிட், சங்கர் ஆகி வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மா)

### க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை முழுவதிலும் 5 லட்சதது 50 ஆயிரம் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள்.

விடைத் தாள்கள் திருத்தும் வேலைகள் முடிவடைந்துள்ள போதிலும், அலுவலக வேலைகள் காரணமாக இந்த முடிவுகள் வெளியாக இன்னும் 2 வாரங்களுக்கு மேலாகலாம் என அவர் தெரிவித்தார்.

### இலங்கைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குவைத் உட்பட அனேக நாட்டு தூதரகங்களுடன் இலங்கை அரசு தொடர்பு கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஆனால் இவ்வாறு பிரசாரம் மேற்கொள்வோர் பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை,

குவைத்தில் தற்போது 30 ஆயிரம் இலங்கையர் பணி புரிவது குறிப்பிடத்தக்கது. (க)

### யாழ் நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மெனக் கோரி யாழ். நகரில் நேற்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்ட எழுச்சிப் பேரணியை நடாத்தினர்,

நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்றலில் இருந்து இந்த துவிச்சக்கரவண்டிப் பேரணி இராமநாதன் வீதியூடாக கே. கே. எஸ். வீதியை அடைந்த பின்னர் அங்கிருந்து அவ்வீதி வழியாக மருத்துவமனை வீதியூடாக நண்பகல் 11-45 மணிக்கு செயலக முன்றலை கூடைந்தது.

இதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக மாணவர் பேரவையினரும், பாடசாலை மாணவர்களும் ஒன்றிணைந்து தயாரித்த மகஜர் அடங்கிய கோரிக்கை, யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரிடம் கையளிக்கப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் மகஜர் ஒன்று மாணவர்களால் கையளிக்கப்பட்டது. பின்னர் பேரணி யாழ். பல்கலைக்கழக மைதானத்தை அடைந்ததும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. (56)

## வர்த்தகர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒன்பது மாதகாலமாக தடை செய்யப்பட்ட பொருட்களை கடத்திச்செல்ல முற்பட்டதாக குற்றம்சாட்டி தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாண வர்த்தகர்ஒருவர் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளார். இவர் தமது கடையில் விற்பனை செய்வதற்காக 'கொம்பாஸ்' பொருத்தப்பட்ட கடிகாரங்களை கொழும்பிலிருந்து எடுத்து வந்தபோது வவுனியாவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ஒன்பது மாதம் விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

### பாரிய குண்டுச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் பெரும் கேள்விக்குறியை ஏற்படுத்தியுள்ளதாக ஏஜென்ஸி செய்திஒன்று தெரிவித்தது,

நேற்றுக் காலை கொழும்பின் முக்கிய பகுதியெங்கும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டிருந்தனராம், (சி)

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெடிப்பது போன்ற படு பயங்கர பாரிய சத்தம் இருமுறை கேட்டபோது, இது நகரைப் பெரிதும் உலுக்கியது.

இதை தொடர்ந்து தலைநகர் உடனடியாக பெரும் பீதியில் மூழ்கியது. பலமணி நேரத்தின் பின்பே நிலைமை வழமைக்கு திரும்பியது.

இரத்மலான என்ற இடத்தில் இச்சத்தம் ஏற்பட்டதாகவும் இதற்கு காரணம் என்னவென்று தமக்கு தெரியாது என்று இராணுவம் தெரிவித்தது. (மா)

### அமெரிக்கா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான ஒப்பந்தம் ஒன்று நேற்று முன் தினம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

அமெரிக்க தூதுக்குழு பிரதிநிதி டொனல்ட் எஸ். பெரமூலும், நிதியமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கமும் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். (க)

### 7 லொறி உணவுப்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

லுள்ள உறவினர் அனுப்பிய உணவுப் பொருட்களே இவையென்றும் யாழ். நகருக்கு உணவுப்பொருட்களை அனுப்புவதற்கு கொழும்பிலிருந்து ஏற்பாடுகளைக் செய்தவர்கள் இதுவரை காங்கேசன்துறை உணவுக்களஞ்சியத்தில் தேங்கிக் கிடக்கும் இந்த உணவுப் பொருட்களை பொறுப்பேற்று. பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கு இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லையென்றும் கூறப்படுகின்றது. (வி)

## அரசியல் வாதிகள் மீது தேர்தல் ஆணையாளர் கண்டனம்

(கொழும்பு)

1989ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கட்சிகளும், வேட்பாளர்களும் தமது வாக்குகளையும் முன்னுரிமை வாக்குகளையும் அதிகரித்துக் கொள்வதற்காக தேர்தல் வேலைகளில் தலையிட்ட ஒரு குழப்பமான போக்கைக் காணக்கூடியதாக இருந்தது என்று தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா கடந்த வாரம் கையளித்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

## 15 பொறியியலாளர் பஞ்சாப்பில் சுட்டுக் கொலை

(சண்டிகார்)

பஞ்சாப்பிலுள்ள சண்டிகார் நகரில் தொழிற்சாலை ஒன்றினுள் புகுந்த சீக்கிய தீவிரவாதிகள் 15 பொறியியலாளர்களை சுட்டுக்கொன்றுள்ளார்கள்.

இச்சம்பவத்தில் மேலும் சில தொழிற்சாலை முகாமைத்துவ அதிகாரிகளும் கொல்லப்பட்டுள்ளார்கள்.

தொழிற்சாலைகள், வங்கிகள் மற்றும் தொழில் நிறுவனங்கள் மீது தற்போது தீவிரவாதிகளின் பார்வை திரும்பியுள்ளது குறிப்பிடத் தக்கது. (மா)

## ஏப்ரல் விடுமுறையில் க. பொ. த. பரீட்சை

(கொழும்பு)

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் வடபகுதியில் நடைபெறவிருந்த (க. பொ. த.) உயர் தரப் பரீட்சையை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாடசாலை விடுமுறையின் போது நடத்துவதற்குச் சகல ஏற்பாடுகளையும் கல்வித் திணைக்களம் செய்துவருவதாகப் பரீட்சை ஆணையாளர் திரு. ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

## 3வது வாகன அணி உணவுப் பொருளுடன் வந்தது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியப் பகுதிக்கு சென்று நேற்று 8 லொறிகள் உணவுப் பொருள்களை எடுத்து வந்தன.

ஒரு லொறியில் அரிசியும் ஏனைய ஏழுலொறிகளில் மாவும் ஏற்றிவரப்பட்டன.

4வது வாகன அணித் தொடர் நாளைக்காலை காங்கேசன்துறை செல்கிறது. இத் தொடரில் 8 லொறிகள் செல்கின்றன. (56)

## உலகக் கிண்ண கிரிக்கெட் பாகிஸ்தான் வெற்றி

(மெல்போன்)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில், பாகிஸ்தான் அவுஸ்திரேலியாவை 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பு எடுத்தாடிய பாகிஸ்தான் 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 220 ஓட்டங்களைப் பெற்றது.

இதன் பின்னர் துடுப்பு எடுத்தாடிய அவுஸ்திரேலியா 45.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து, 172 ஓட்டங்களைப் பெற்றது. இவர்கள் ஒரு கட்டத்தில் 30 ஓவரில் 2 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 116 ஓட்டங்களைப் பெற்றிருந்ததும் குறிப்பிடத் தக்கது. (வி)

## வறிய குடும்பங்களுக்கு இலவச பால்மா

(சித்தன்கேணி)

வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பங்களின் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக பால்மா வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக நாடெங்கிலுமுள்ள சகல பிரதேச செயலர் பணிமனைகளுக்கும் வறுமை நிவாரண ஆணையாளர் திரு. மி. கே. குணவர்த்தன சுற்று நிருபம் ஒன்று அனுப்பிவைத்துள்ளார்.

அச்சுற்று நிருபத்தில் மேலும் வறுமை நிவாரண உணவு முத்திரையுள்ள குடும்பங்களில் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் விபரத்தை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அனுப்பிவைக்குமாறும் குழந்தைகளுக்கு இலவசமாக பால்மா வழங்கப்படவுள்ளதாகவும் இந்தக் குடும்பங்கள் வறுமை நிவாரண உணவு முத்திரை வேலைத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (137)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கல்முனை - பூநகரி முகாம்களிலிருந்து படையினர் ஆனையிறவுப் பகுதிநோக்கி ஷெல் தாக்குதல்களையும் கடற்பரப்பிலிருந்து பீரங்கித் தாக்குதல்களையும் நேற்று அதிகாலையிலிருந்து மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலை 3-00 மணியிலிருந்து 5-00 மணி வரையில் இத்தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

ஹெலிகொப்டர் அப்பகுதியை வட்டமிட்டு துப்பாக்கிப்பிரயோகத்தையும் 5-00 மணியளவில் மேற்கொண்டபடியிருந்தது. (56)

## தோட்டத்தொழிலாளருக்கு 100 கோடி ரூபா சம்பளம்

(கொழும்பு)

தோட்டத்தொழிலாளர்களுக்கு மாதாந்தம் 100 கோடி ரூபா சம்பளமாக வழங்கப்படுவதாக ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்துள்ளார்.

தவறான முகாமைத்துவம், ஊழல் நடவடிக்கை காரணமாகவே இவ்வளவு பணம் வழங்கப்படுகிறது. தோட்டங்கள் ஓரளவு நஷ்டத்தில் இயங்கிவருகின்றன. தோட்டங்களில் நிர்வாகம் தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட இருக்கின்றபோதும் அவற்றின் உடமை தனியார் துறைக்கு வழங்கப்படமாட்டாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (சி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.